ஈரோடு அருகில் உள்ள பட்டக்காரன்பாளையம் என்ற இடத்தில் சுவிசேச பணி உரையாற்றிக் கொண்டிருந்த பொழுது சில விரோதிகள் இவரை அடித்து உதைத்து சப்பாத்திக் கள்ளி புதருக்குள் வீசி விட்டு சென்றனர். 42 இடங்களில் முட்கள் தைத்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு முட்கள் அகற்றப்பட்டன. அவர் வாழ்ந்த இல்லம் இன்றும் ஈரோடு அருகில் காஞ்சிக்கோயில் என்ற சிற்றூரில் 'பாப்ளி இல்லம்' என்று பெயரிடப்பட்டு இன்றும் விளங்கி வருகிறது.

குருகுல இசைக்கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக சில இசை மேதைகள் கி.பி.1900 ஆண்டுகளில் குருகுல இசைக்கல்விக்கு மாற்றாக பள்ளி இசைக்கல்வியை அறிமுகப்படுத்த முயற்சித்து தோல்வி கண்டிருந்த நிலையில் கி.பி.1920 ஆம் ஆண்டில் சென்னை லயோலா கல்லூரியை மையமாக வைத்து Rev. H.A. POPLI IYAR அவர்கள் இசைப்பள்ளி ஒன்றை ஆரம்பித்தார். அதில் பணியாற்ற முன்னணி கிரிமினல் வழக்கறிஞர் திரு.சாம்பமூர்த்தி ஐயர் அவர்கள் முன் வந்தார். கர்நாடக இசைக்கலையில் புலமை பெற்றிருந்த இவர் எழுதிய 'FLUTE' என்ற அரிய நூலுக்கு முகவுரையை பதிவு செய்த Rev. H.A. POPLI IYAR அவர்கள் இதன் மூலம் தனக்குரிய இசை ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளார். கிறிஸ்தவ கீர்த்தனை பாடல்கள் நான்கு தொகுதிகளாக தொகுத்து வழங்கினவரும் இவரே ஆவார். வெளிநாட்டு மிஷனெரிமார்கள் தங்களுடைய நாட்டிற்கு விடுமுறை நாட்களில் சென்று வரும் நிகழ்வை 'FURLO' என்றழைப்பர். அப்படி ஒருமுறை FURLO வில் சென்றிருந்த போது 'எல்லாம் இயேசுவே எனக்கெல்லாம் ஏசுவே' என்ற பாடலை ஆங்கிலத்தில் 'All are Jesus Christ to me all are Jesus Christ' என்று ஆங்கிலத்தில் பாடியும் தென்னிந்திய இசை மற்றும் கலாச்சாரத்தைப் பற்றியும் தன்நாட்டு மக்களுக்கு சொல்லி மகிழ்ந்தார்.

Rev. H.A. POPLI IYAR அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவரோடு மிக நெருங்கிப் பழகினவரும் தற்போது இசைப்பள்ளி ஒன்றை கோவை வெள்ளளூர் பகுதியில் ஆரம்பித்து நடத்தி வருபவரும் இசையில் மிகத்தேர்ச்சி பெற்றவருமான திரு.வேதநாயகம் ஐயா அவர்கள் சொல்கிறார்: "என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு மகான் Rev. H.A. POPLI IYAR ஆவார். ஒரு முறை ஈரோடு லயன்ஸ் கிளப் சார்பில் இவரை 'Indians in England' என்ற தலைப்பில் பேச அழைத்திருந்த போது 'enatharumai periyorgale, thaimargale nanbargale vanakkam' என்று கொஞ்சும் தமிழில் ஆரம்பித்து சுமார் அரை மணிநேரம் தமிழிலேயே உரையாற்றினார். இவரை அழைத்தவரும் அன்றைய லயன்ஸ் கிளப் செகரட்டிரியுமான திரு.மீனாட்சி

சுந்தரம் முதலியார் என்பார் இவரது தமிழ் உரையாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தது மிகவும் வேடிக்கையான சம்பவம். Rev. H. A. POPLI IYAR அவர்கள் கிறிஸ்தவ கீர்த்தனைகள் பாடல்களில் தீராத மோகம் கொண்டவரும் அனைத்து சபைகளிலும் இப்பாடல்கள் பாடப்படவேண்டுமென்பதில் அதிக ஆர்வமும் கொண்டிருந்தார்.'' என்று நினைவு கூறுகின்றார்.

''இதோ ஓர் அருமையான கீர்த்தனை பாடல்

''யேசு நசரேயின் அதிபதியே''

கீர்த்தனை 84 (95)

GH RAJA PONNIAH, M.A., M.Phil.,
25/A, 4th Street, Krishna Nagar,
Sowripalayam, Coimbatore – 641028
Cell : 97873 80701
E-mail : hrthraj@gmail.com